DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF Vth ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE

VALLIYOOR

| | | |
|---|---|---|
| Calendar | .. .. | S.C.231/2023 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |

Deposition of Witness for PW–1 — Prosecution (LW–1) / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : | மூக்கம்மாள் |
| Husband's/Father's Name | : | க/பெ சித்திரைவேல் |
| Village | : | குஞ்சன்விளை |
| Taluk | : | இராதாபுரம் |
| Calling | : | |
| Age | : | 68 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of August 2026.

எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u> :–

நான் குஞ்சன்விளையில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை பார்க்கிறேன். ஆஜராகியிருக்கும் எதிரி எனது மருமகள்தான். இறந்துபோன சிங்காரவேல் எனது மகன். எனது மகன் குடிபழக்கத்தால் இறந்துவிட்டார். ஆஜராகியிருக்கும் எதிரி மருந்து வைத்து கொலை செய்ததாக நான் போலீசில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள

கையொப்பம் என்னுடையதுதான். (காட்டப்பட்ட ஆவணம் புகார் மனு). போலீசார் என்னிடம் எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் அதன்பிறகு என்னிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை.

(அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியது ஏற்றுக்கொள்ளப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டார்)

<u>அரசுதரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஆஜர் எதிரி எனது மகனுடன் அடிக்கடி சண்டை போடுவதாகவும், கடந்த 01.10.2022ம் தேதி வேலைக்கு போய்விட்டு வந்த எனது மகனிடம் எதிரி சண்டைபோட்டதாக கேள்விபட்டு மதியம் 3.00மணிக்கு அவனது வீட்டிற்கு போய் பார்த்தபோது எனது மகன் குப்புற படுத்து கிடந்ததாகவும், அவன் படுத்திருக்கிறான் என்று நினைத்து வீட்டிற்கு போய்விட்டு பின்னர் மறுநாள் காலையில் வந்து பார்த்தபோது அவன் வாந்தி எடுத்து வீட்டின் முன் அறையில் இறந்துகிடந்ததை பார்த்து எதிரியிடம் கேட்டபோது தெரியாது என சொன்னதால் எதிரி எனது மகனை விஷமருந்து கொடுத்து கொன்றிருக்கலாம் என சந்தேகத்தின் அடிப்படையில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு பின்னர் போலீசார் விசாரிக்கும்பொழுதும் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எனது மகன் அதிக குடிபோதையில் இறந்துவிட்டார் என்றும், புகார் வாக்குமூலம் எதுவும் எதிரி மீது கொடுக்கவில்லை என்றும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது பதிவு செய்யப்பட்டது).

RAJMOHAN Digitally signed by RAJMOHAN Date: 2026.08.24 06:24:21 +0530

Vth Additional Sessions Judge,
Valliyoor.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF Vth ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE

VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. | .. | S.C.231/2023 |
| Miscellaneous | .. | .. | |
| Preliminary Register | .. | .. | |
| Sessions | .. | .. | |

Deposition of Witness for PW-2 — Prosecution (LW-2) / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : | முத்துசுகன்யா |
| Husband's/Father's Name | : | க/பெ மகாராஜா |
| Village | : | நடுவக்குறிச்சி |
| Taluk | : | தட்டார்மடம் |
| Calling | : | |
| Age | : | 20 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of August 2026.

எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u> :-

நான் நடுவக்குறிச்சியில் குடியிருக்கிறேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். ஆஜராகியிருக்கும் எதிரி எனது அம்மா. இறந்த சிங்காரவேல் எனது அப்பா. எனக்கு முன்பாக சாட்சி சொன்னது எனது பாட்டி. எனது அப்பா அதிகமாக குடித்து வந்ததால் குடிபோதையில் இறந்துவிட்டார். போலீசார் என்னிடம் இதுகுறித்து எதுவும் விசாரிக்கவில்லை.

(அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியது ஏற்றுக்கொள்ளப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டார்)

<u>அரசுதரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது அப்பா அடிக்கடி குடித்துவிட்டு வருவதால் அவருக்கும், எனது அம்மாவிற்கும் சண்டை நடந்து வந்ததாகவும், கடந்த 01.10.2022 ம் தேதி மதியம் 2.00 மணிக்கு வழக்கம்போல் எனது அப்பா குடித்து வந்ததால் எனது அம்மா சண்டை போட்டதாகவும், அப்போது எனது அப்பா குடிக்கும் டீயில் கோழிகளுக்கு வரும் உன்னிக்கு போடும் விஷமருந்தை டீயில் கலந்து எனது அம்மா, எனது அப்பாவிற்கு கொடுத்தாகவும், நான் அங்கு வந்து பார்த்துவிட்டு எனது அப்பா படுத்திருக்கிறார் என்று நினைத்துவிட்டு பின்னர் மறுநாள் காலை பார்த்தபொழுது எனது அப்பா வாந்தி எடுத்து வாயில் நுரைதள்ளி இறந்தநிலையில் கிடந்ததை பார்த்தேன் என்றும், எனது அம்மாவிடம் கேட்டபோது தெரியாது என்று சொன்னதாகவும், இந்த தகவலை எனது பாட்டியிடம் சொல்லி எனத அப்பாவின் இறப்பில் சந்தேகம் இருந்ததால் எனது பாட்டி புகார் கொடுத்ததாகவும், பின்னர் போலீசார் விசாரிக்கும்பொழுது எனது அப்பாவிற்கு எனது அம்மா விஷமருந்து கொடுத்து கொன்றுவிட்டதாக வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எனது அப்பா அதிக குடிபோதையில் இறந்துவிட்டதாகவும், எதிரி எனது அம்மா என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது பதிவு செய்யப்பட்டது).

RAJMOHAN Digitally signed by RAJMOHAN Date: 2026.08.24 06:24:35 +0530

Vth Additional Sessions Judge,
Valliyoor.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF Vth ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE

VALLIYOOR

| | | |
|---|---|---|
| Calendar | .. .. | S.C.231/2023 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | PW-3 | Prosecution (LW-3) |
| | | Defence |
| | | Court |

| | | |
|---|---|---|
| Name | : | ஜான்சி |
| Husband's/Father's Name | : | த/பெ சிங்காரவேல் |
| Village | : | குஞ்சன்விளை |
| Taluk | : | இராதாபுரம் |
| Calling | : | |
| Age | : | 18 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of August 2026.

எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை :–

நான் குஞ்சன்விளையில் குடியிருக்கிறேன். நான் ஜவுளிக்கடையில் வேலை பார்க்கிறேன். ஆஜராகியிருக்கும் எதிரி எனது அம்மா. இறந்த சிங்காரவேல் எனது அப்பா. எனக்கு முன்பாக சாட்சி சொன்னது எனது பாட்டி. எனது அப்பா அதிகமாக குடித்து வந்ததால் குடிபோதையில் இறந்துவிட்டார். போலீசார் என்னிடம் இதுகுறித்து எதுவும் விசாரிக்கவில்லை.

(அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியது ஏற்றுக்கொள்ளப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டார்)

அரசுதரப்பில் குறுக்கு விசாரணை

எனது அப்பா அடிக்கடி குடித்துவிட்டு வருவதால் அவருக்கும், எனது அம்மாவிற்கும் சண்டை நடந்து வந்ததாகவும், கடந்த 01.10.2022 ம் தேதி மதியம் 2.00 மணிக்கு வழக்கம்போல் எனது அப்பா குடித்து வந்ததால் எனது அம்மா சண்டை போட்டதாகவும், அப்போது எனது அப்பா குடிக்கும் டீயில் கோழிகளுக்கு வரும் உன்னிக்கு போடும் விஷமருந்தை டீயில் கலந்து எனது அம்மா, எனது அப்பாவிற்கு கொடுத்தாகவும், நான் அங்கு வந்து பார்த்துவிட்டு எனது அப்பா படுத்திருக்கிறார் என்று நினைத்துவிட்டு பின்னர் மறுநாள் காலை பார்த்தபொழுது எனது அப்பா வாந்தி எடுத்து வாயில் நுரைதள்ளி இறந்தநிலையில் கிடந்ததை பார்த்தேன் என்றும், எனது அம்மாவிடம் கேட்டபோது தெரியாது என்று சொன்னதாகவும், இந்த தகவலை எனது பாட்டியிடம் சொல்லி எனத அப்பாவின் இறப்பில் சந்தேகம் இருந்ததால் எனது பாட்டி புகார் கொடுத்ததாகவும், பின்னர் போலீசார் விசாரிக்கும்பொழுது எனது அப்பாவிற்கு எனது அம்மா விஷமருந்து கொடுத்து கொன்றுவிட்டதாக வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எனது அப்பா அதிக குடிபோதையில் இறந்துவிட்டதாகவும், எதிரி எனது அம்மா என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது பதிவு செய்யப்பட்டது).

RAJMOHAN Digitally signed by RAJMOHAN Date: 2026.08.24 06:24:49 +0530

Vth Additional Sessions Judge,
Valliyoor.